விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 11 புதன்கிழமை (27.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 273

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# 10 ஆயிரம் மெ.தொன் உணவுப் பொருள்

# யாழ்.குடாநாட்டு மக்களுக்குத் தேவை

## கூட்டமைப்பு எம்.பிக்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு ஒருமாதத்திற்கு குறைந்தது 10 ஆயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருட்கள் தேவைப்படுகின்றது. ஆனால் 7 ஆயிரத்து 685 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் கருத்திற்கும் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், கி.சிவநேசன் ஆகியோர் கூட்டாக கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்றுப் பகல் மோதல் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு விடுதலைப் புலிகள் ஆட்லறி மற்றும் சிறு ஆயுதங்களால் தாக்குதல் நடத்தியதாகவும் இதன் போது ஒரு இராணுவச்சிப்பாய் பலியானதுடன் 4 சிப்பாய்கள் காயமடைந்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

பதிலுக்கு தாம் விடுதலைப்புலிகளின் நிலைகள் நோக்கி ஆட்லறித்தாக்குதல் நடாத்தியதாகவும் இதன்போது விடுதலைப்புலிகளின் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று வரணி,வலிகாமம் பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் ஆட்லறித்தாக்குதல்களை மேற்கொண்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ச-5)

## திருமலையிலிருந்து ஆயிரம் பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்

(வவுனியா)

கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக யாழ்.குடாநாட்டுக்குச் செல்லும் வகையில் வவுனியாவில் தங்கியிருந்த ஆயிரம் பேர் நேற்றுக் காலை ஜெட்லைன் என்ற கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

மேலும் வவுனியாவில் தங்கியுள்ள ஏனையோரையும் குடாநாட்டுக்கு கப்பல் மூலம் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை காங்கேசன்துறையிலிருந்து ஒரு தொகுதியினர் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலும் யாழ்.குடா நாட்டுக்கு அனுப்பி வைக்கும் வகையில் ஹெம்டன் என்ற சரக்குக் கப்பலில் 500 மெற்றிக்தொன் கோதுமை மா 400 மெற்றிக் தொன் சர்க்கரை என்பன ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கப்பல் இன்று குடாநாட்டுக்கான பயணத்தினை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## யாழ்ப்பாண நிலைமை மிகமோசமாக உள்ளது

### கண்காணிப்புக்குழுத் தலைவர் கவலை

(கொழும்பு)

யாழ்ப்பாண நிலைமை மிக மோசமாகவுள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் லார்ஸ் ஜோஹான் ஷொல்வ்பெர்க் தெரிவித்துள்ளார்.

றொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்படுகின்ற வன்முறையின் தன்மை அதிர்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளது.மிகவும் அதிருப்தியடைந்துள்ளோம் இந்த வன்முறையின் அளவு குறைவதாகத் தெரியவில்லை.

அரசாங்கமானது படுகொலைகள் தொடர்பிலான விசார (04 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர் தொடர்பில் முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்

### ஜனாதிபதி ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு பொதுமக்கள் முறைப்பாடுகளை அடுத்தமாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணியகம் அறை இலக்கம் 2131 பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் பௌத்த லோக மாவத்தை கொழும்பு 07 என்ற முகவரிக்கு எழுத்துமூலமாகவோ அல்லது 2669132 என்னும் தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு தெரிவிக்கமுடியும் என்று ஆணைக்குழுவின் செயலாளர் பந்துலு குலத்துங்க அறிவித்துள்ளார். (எ-1)

## பிரபாவிடமிருந்து உத்தரவாதம் கிடைத்தால் எந்நேரமும் பேசுவதற்கு அரசாங்கம் தயார்

### அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவரிடம் இருந்து நேரடியான உத்தரவாதம் கிடைக்குமானால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எந்நேரமும் ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சரும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அரசாங்க பேச்சாளருமான கெஹலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் உத்தரவாதம் குறித்து கோரினால் எமது மேலிடம் அது குறித்து பரிசீலிக்கும் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளமை தொடர்பாக கருத்துக்கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியதாவது; விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்துள்ள கூற்றை அரசாங்கம் வரவேற்கிறது.

விரைவில் விடுதலைப்புலிகளின் தலைவரிடம் இருந்து எமக்கு நேரடியான உத்தரவாதம் வருமிடத்தில் நாங்கள் சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பது குறித்து தீவிரமாக பரிசீலிப்போம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய தயார் என்று தெரிவித்துள்ளார். இது சமாதான செயற்பாட்டிற்கு புதிய உத்வேகம் இருக்கும் என்று நம்புகிறோம்.

பிரச்சினையை (04 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் வர்த்தகர் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். திருகோணமலை புறநகர்ப் பகுதியான பாலையூத்து பூம்புகாரில் நேற்று முன்தினமிரவு 8 மணியளவில் அவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மொஹமட் முசா என்று மரக்கறி வியாபாரியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மேலும் ஒரு தொகுதி டீசல் இ.போ.சவுக்கு கிடைத்தது

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மேலும் 3 ஆயிரத்து 300 லீற்றர் டீசல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 21 ஆம்திகதி பெற்றுக் கொண்ட 6 ஆயிரத்து 600 லீற்றர் டீசல் நேற்றுடன் முடிபடைந்துள்ள நிலையில் மேலும் குறிப்பிட்ட அளவு டீசலை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுஸ்தாபனத்திடம் இருந்து பெற்றுக் கொண்டதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். முகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.

தற்போது மட்டுப்படுத்தப்பட்ட சேவையே வழங்கப்பட்டு வருகிறது. வருமானம் குறைந்தளவிலேயே கிடைக்கிறது. ஊழியர்களுக்கு ஊதியங்களை உரிய முறையில் வழங்க முடியவில்லை. இதனால் தொடர்ந்து சேவையை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்.நகரில் உள்ள கடைகளில் உணவுப்பொருட்கள் தீர்ந்துள்ள நிலையில் நகருக்கு வரும் மக்களின் தொகை குறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார். (எ-133)

# வவுனியாவில் கிளைமோர் விமானப்படைச் சிப்பாய் பலி

(வவுனியா)

வவுனியாவில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் விமானப் படையைச் சேர்ந்தவர் கொல்லப்பட்டார்.

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் சுற்றுக் காவல்பணியில் மூன்று விமானப் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களை இலக்கு வைத்து நேற்றுக் காலை 6.45 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த மூவரில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்தோர் உலங்கு வானூர்தி மூலம் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ச-5)


# கேள்வி அறிவித்தல்

## கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம்

1. இலங்கை ஜனநாயக சோஷலிசகுடியரசின் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின்; PSDG. SEMP. SWII நிதி ஒதுக்கீட்டிலிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட கட்டிட வேலைகளை பூர்த்தி செய்ய வலயக் கல்விப்பணிப்பாளரும் கேள்விச் சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.
2. ஒப்பந்தகாரர் இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகம் உள்ளவராகவும் இலங்கை தேசிய கட்டிட ஒப்பந்தகாரர் சங்கத்தின் அங்கத்தவராகவும், பதிவுப்புத்தகம் 2006 ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் வழங்கல் 2006.09.26-ந் திகதியிலிருந்து 2006.10.06 -ந் திகதி முற்பகல் 2.00 மணிவரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 2006.10.1[illegible]-ம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப் பத்திரப்பெட்டி திறக்கப்படும்.
4. கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக்கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணங்களை யாழ்ப்பாண கல்வி வலய அலுவலகத்தில் செலுத்துவதன் பேரில்கேள்விப்பத்திர படிவங்களை பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக் கொள்ளவும். மேலதிக தகவல் தேவைப்படின் இங்கு பெற்றுக்கொள்ளவும் முடியும். பாடசாலை அபிவிருத்திச்சங்கம் (1.,2.,3. பாடசாலை வேலைகள்) கட்டணமேதுமின்றி கேள்விப்பத்திரங்களை பெற்று கேள்வியில் பங்கெடுக்கமுடியும்.

| பாடசாலையின் பெயரும் வேலையின் விபரமும் | மீளளிக்க முடியாத வைப்புப்பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| 1) யா/சென்.சாள்ஸ் மகாவித். Computer Learning Centre | 500.00 | 3200.00 | M9 |
| 2) யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி Computer Learning Centre | 250.00 | 2300.00 | M9 |
| 3) யா/சன்மார்க்க ம.வி Computer Learning Centre | 250.00 | 2200.00 | M9 |
| 4) யா/கோப்பாய் நாவலர் வித். Construction of two storey Building 60'x25 'G.F | 500.00 | 13000.00 | M8 |

### மீள் கேள்வி அறிவித்தல்

| பாடசாலையின் பெயரும் வேலையின் விபரமும் | மீளளிக்க முடியாத வைப்புப்பணம் | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|
| அ) யா/உயரப்புலம் மெ.மி.த.க. Construction of two storey Building 40'x25 'G.F | 500.00 | 19200.00 | M8 |
| ஆ) யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா Construction of O/L sc,Lab க.பொ.த.(சா.த) விஞ்ஞான ஆய்வுகூடம் | 500.00 | 15200.00 | M8 |
| இ யா/நல்லூர் ஸ்தான சி.சி.ரி Construction of two storey Building G.F O/L sc,Lab | 500.00 | 13100.00 | M8 |
| ஈ) யா/சென்மேரிஸ் வித் (O.L.R) Construction of three storey c.room building | 500.00 | 18600.00 | M8 |
| உ) யா/கோப்பாய் சரவணபவானந்தா Construction of three storey c.Room Building | 750.00 | 13750.00 | M7 |
| ஊ) யா/மத்திய கல்லூரி Repairs to James Lynch Hall 130 'x 25 ' Ground floor | 750.00 | 27200.00 | M7 |
| எ) யா/மத்திய கல்லூரி Repairs to 150th century block (46.6 x 10.9 ) | 750.00 | 20500.00 | M7 |

5. கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டிட மதிப்பீட்டு அறிக்கை பத்திரங்களின் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதனை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
6. கேள்வியாளர் பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதியையும் ஒப்பந்த ஆவணங்களையும் ஒரு கடித உறையிலும் மறு பிரதியை வேறு கடித உறையிலும் இடல் வேண்டும். இரண்டு கடித உறையும் வேறு பெரிய கடித உறையிலிட்டு மேல் மூலையில் வேலையின் விபரமும் ஒப்பந்தகாரரின் இறப்பர் முத்திரையும் பொறிக்கப்பட்டு தலைவர் கேள்விச்சபை ,வலயக்கல்விப் பணிமனை ,யாழ்ப்பாணம் என விலாச மிட்டு வலயக் கல்விப்பணிப்பாளர் யாழ்ப்பாண அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் 2006.10.13-ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் இடப்பட வேண்டும்.
7. குறித்த நேரத்திற்கு பிந்திய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வே.தி.செல்வரத்தினம்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-503)


# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை கற்கை நெறி

## பீடாதிபதி பாலசுகுமார் தகவல்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை கற்கை நெறி ஒன்றினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரத்துறை பீடாதிபதி பாலசுகுமார் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக ஊடகவியல் சான்றிதழ் கற்கை நெறியாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இதன் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களாக இக் கற்கை நெறி ஊடக டிப்ளோமா மற்றும் ஊடகவியல் பட்டப்படிப்பு கற்கை நெறியாகவும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் புறநிலை கற்கை நெறிச்செயற்திட்டத்தின் கீழ் ஊடக சான்றிதழ் கற்கை நெறி சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் இக் கற்கை நெறி நடத்தப் படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

புகைப்படக் கலை, வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் தொடர்பாக அறிவினைப் போதிக்கும் வகையில் இச் சான்றிதழ் கற்கை நெறி வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

21 ஆம் நூற்றாண்டு தகவல் நூற்றாண்டாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதால் மக்களிடம் நல்ல தகவல்கள் போய்ச் சேர வேண்டும் என்பதால் ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கும் அதிக ஆர்வம் கொண்டவர்களுக்கும் இக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச-5)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னை சந்திக்க முயற்சிக்கவில்லை

## தமிழக முதல்வர் கருணாநிதி பேட்டி



தமிழகத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னைச் சந்திக்க முயற்சிக்கவில்லைஎன்று தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு அளித்த நேர்காணலில் முதல்வர் கருணாநிதி இதனை கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யாரும் என்னைச் சந்திக்கவும் இல்லை அதுபற்றி முயற்சிக்கவும் இல்லை.

அந்தத் தரபில் முயற்சி மேற்கொண்டதாகக் கூறப்படுவதற்கு பெயர்தான் சால்ஜாப் என்னை யாரும் சந்திக்கத் தொடர்பு கொள்ளவில்லை .அவர்கள் முயற்சித்தால் சந்திப்பீர்களா என்பது போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாது. இலங்கையில் நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிறது. இந்த நிலையில் மத்திய அரசு என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி கேள்வியாகவே இருக்கிறது.மத்திய அரசிடமிருந்து இதற்கு பதில் இல்லை என்றார் கருணாநிதி. (ச-5)

# மேலும் ஏழு படகோட்டிகள் நெடுந்தீவில் வைத்துக் கைது

மன்னாரிலிருந்து ஏழு படகுகளில் வந்த 52 பொதுமக்களையும் படகுகோட்டிகளையும் கடற்படையினர் கைது செய்து நெடுந்தீவுப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு பின் பொலிஸாரினால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தியுள்ளனர்.

ஏ-9வீதி மூடப்பட்டமையால் வவுனியாவில் தங்கியிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 52 பொதுமக்கள் மன்னார் ஊடாக நெடுந்தீவு நோக்கி வந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தமையால் அவர்களைத் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதித்த யாழ்.மாவட்ட நீதிவானும் ஊர்காவற்றுறை பதில் நீதிவானுமாகிய இ.த.விக்னராஜா,படகோட்டிகள் 14 பேரையும் எதிர்வரும் மாதம் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் அவர்களின் படகுகளை நெடுந்தீவுப்பொலிஸ் பொறுப்ப திகாரி கண்காணிப்பில் வைக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

# குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் யாழ். மாவட்டத்தில் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் வழங்கப்படுவதாக யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் கொழும்பிலிருந்து யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் விசேட விமானம் மூலம் நேற்று முன் தினம் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதனையடுத்து தற்போது யாழ். மாவட்டத்தின் சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் தடுப்பூசி வழங்கும் பணிகள் வழமை போல் நடைபெறுகிறது என அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளைக்காரன் பணக்காரர்களைக் கொள்ளையடித்து ஜீவனம் செய்கிறான். முதலாளி ஏழையைக் கொள்ளையடித்து ஜீவனம் செய்கிறான்.

-பெர்னார்ட்ஷா

வலம்புரி

# கறந்த பால் முலைபுகா யாழ்ப்பாணத்தில் ஏறிய விலை இறங்கிவரா!

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட பொருள் தட்டுப்பாட்டினால் அவற்றின் விலை கண்டபாட்டில் உயர்வடைந்துள்ளது.

பொருள் தட்டுப்பாடு ஏற்படுகின்றபோது விலையேற்றம்வழமையானதெனினும் அதில் ஓர் நியாயப்பாடு இருப்பது அவசியமாகும்.

எனினும் யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலை நியாயமற்ற முறையில் அதிகரித்துள்ளமை இங்குள்ள நிர்வாக ஒழுங்கீனத்தை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

அதேநேரம் தட்டுப்பாட்டுப் பொருட்கள் சந்திகளில் விற்பனைக்கு வந்துள்ளமை அதிசயமான உண்மை.

குறிப்பாக பெற்றோல், மண்ணெண்ணெய் என்பன சந்திகளில் வைத்து உச்ச விலையில் விற்கப்படுகின்றன.

எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் முடிபடைந்து பல வாரங்கள் கடந்த நிலையிலும் கறுப்புச் சந்தையில் பெற்றோல்தட்டுப்பாடின்றி கிடைப்பது எங்ஙனம்?

இது பற்றி உரியவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். இவை பொருள் தட்டுப்பாடு பற்றிய சில குறிப்புகள்.

மறுபுறத்தில் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்கள் ஒருபோதும் குறைந்ததாக வரலாறு இல்லை.

சிவவாக்கியரின் வார்த்தையில் சொல்வதாயின்;

'... கறந்தபால் முலைபுகா, கடைந்த வெண்ணெய் மோர்புகா , உடைந்துபோன சங்கின் ஓசை மீண்டும்போய் உயிர்பெறா...'

என்பதுபோல் யாழ்.குடாநாட்டில் ஏறிய விலை ஒருபோதும் குறைவடையா? என்று அடித்துக் கூறலாம்.

இந்த அநியாயமான நிலை மாற வேண்டும். இதுவிடயத்தில் வணிகர் கழகங்கள், வர்த்தக சங்கங்கள் காத்திரமான நடவடிக்கை எடுப்பது அவசியம்.

குறிப்பாக உணவகங்களில் அதிகரிக்கப்படும் விலைகள் எக் காலத்திலும் குறைக்கப்பட்டதாக யாழ்.மக்கள் அறிந்ததில்லை.

எனவே யாழ்.வர்த்தகர்கள் பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றபோது அவற்றின் விலைக் குறைப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையேல் குடாநாட்டு வர்த்தகர்களின் 'அறாவிலை' யில் விற்பவர்கள் என்ற பழி பொதுமக்களால் சுமத்தப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# வெளிவாரி அலகின் நுண்கலைமாணி பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் அலகினால் நடாத்தப்பட்ட நுண்கலைமாணி (சங்கீதம், நடனம்) பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

அதில் சித்திபெற்றோர் வருமாறு,

*சங்கீதம் -2001*

முதலாம் ஆண்டுப் பரீட்சை

செல்வி சிவானந்தன் சுகன்ஜா.

இரண்டாம் ஆண்டுப் பரீட்சை

திருமதி அனுசுஜா பிரையிட், திருமதி வத்சலாதேவி சங்கரநாராயணன்.

மூன்றாம் ஆண்டுப் பரீட்சை

செல்வி விமலநாதன் கலைவாணி, திருமதி வத்சலாதேவி சங்கரநாராயணன்.

நான்காம் ஆண்டுப் பரீட்சை

திருமதி கௌரிமலர் மகேந்திரன், செல்வி சிவானந்தன் சுகன்ஜா, திருமதி வத்சலாதேவி சங்கரநாராயணன், எபநேசன் நேசராஜ்வாட்ஸ்வோர்த்,செல்வி விமலநாதன் கலைவாணி, செல்வி வைத்திலிங்கம் மோகனசுந்தரி, செல்வி செல்லையா சீலியா தயாநந்தினி, செல்வி மயில்வாகனம் தர்மிளா, செல்வி சின்னத்தம்பி யோகேஸ்வரி செல்வி தில்லையம்பலம் ஜமுனா, செல்வி பாலசுந்தரம் தேவகுமாரி, திருமதி சிவாஜினி பத்மராஜ்,செல்வி சிறிரங்கநாதன் கல்யாணி.

*நடனம்-2001*

முதலாம் ஆண்டுப் பரீட்சை

செல்வி சுப்பிரமணியம் தர்மகௌசல்யா.

இரண்டாம் ஆண்டுப் பரீட்சை

திருமதி.சூரியகலா சிறிபவன்.

மூன்றாம் ஆண்டுப் பரீட்சை

செல்வி சச்சிதானந்தன் ஜனீர்தா, திருமதி ஜெயந்தி சுகீர்தன், செல்வி சுந்தரம் அகல்யா.

நான்காம் ஆண்டுப் பரீட்சை

செல்வி சச்சிதானந்தம் ஜனீர்தா , செல்வி கந்தசாமி நர்மதா, திருமதி ஜெயந்தி சுகீர்தன்.

*பட்டம் பெறுவோர்-2001*

*சங்கீதம்*

முதல் வகுப்பு, வாய்ப்பாட்டு

செல்வி சிவானந்தன் சுகன்ஜா

இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு)

*மிருதங்கம்*

எபநேசர் நேசராஜ் வார்ட்ஸ்வோர்த்

திருமதி வத்சலாதேவி சங்கரநாராயணன், செல்வி விமலநாதன் கலைவாணி, செல்வி வைத்திலிங்கம் மோகனசுந்தரி, செல்வி மயில்வாகனம் தர்மிளா, செல்வி தில்லையம்பலம் யமுனா, திருமதி சிவாஜினி பத்மராஜ், செல்வி சிறிரங்கநாதன் கல்யாணி.

*நடனம்*

செல்வி சச்சிதானந்தன் ஜனீர்த்தா,திருமதி ஜெயந்தி சுகீர்தர், செல்வி சுந்தரம் அகல்யா. (து-133)

# உணவு விநியோகம் தொடர்பில் பருத்தித்துறையில் நேற்று மாநாடு

வடமராட்சி மக்களின் உணவு விநியோகம் தொடர்பாக 524 பிரிகேட் தளத்தில் அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வடமராட்சி மக்களுக்கான உணவு விநியோகம் தொடர்பாக ஊடகங்கள் மூலம் தவறான தகவல்கள்வெளிவந்ததைத்தொடர்ந்தே இந்த அவசர கலந்துரையாடலை வடபகுதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஒழுங்கு செய்துள்ளார் என படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக் கலந்துரையாடலில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர்கள் பருத்தித்துறை பிரதேச செயலகம், கிராம சேவையாளர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள் மற்றும்அதன் பொது முகாமையாளர்கள் என பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறையிலுள்ள உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள 524 பிரிகேட் படைத்தளத்தில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

தற்போது வழங்கப்படும் உணவுப்பொருட்கள் போதுமானதா? போதுமானதாகவில்லையா? என்பது பற்றியும் மற்றும்பல விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-101)

# சர்வகட்சி கூட்டத்தில் கலந்து கொள்ளாதது பாராளுமன்றக் குழுவின் தீர்மானம்

## ரணில் தெரிவிப்பு



சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுவினால் எடுக்கப்பட்டது என்று அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இம் முடிவில் மாற்றங்கள்ளக் கொண்டு வரவேண்டும் என்றால் அது தொடர்பில் பாராளுமன்றக் குழுவின் அனுமதியைப் பெற வேண்டும் என அவர் கூறினார்.சிறிஜெயவர்த்தனபுர பாராளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட போதுஅவர் இக் கருத் துக்களைத் தெரிவித்துள்ளார்.அரசுக்கும் தமது கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையே அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தொடர்பான விரிவான அறிக்கை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிசினால் பாராளுமன்றக் குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவி த்துள்ளது.தேசிய பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்து அதனை நடைமுறைப்படுத்துவதற்காக திட்டவரைபைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்ப தாக ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ச)

# போருக்கெதிரான முன்னணி ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்று வரும் ஆட்கடத்தல்கள் மற்றும் கொலைகளுக்கு எதிராக குரல் கொடுத்துவரும் போருக்கு எதிரான முன்னணியின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துத் தங்களது முறைப்பாடுகளைக்கொடுத்தனர்.

இன்றைய சந்திப்பில் கலந்து கொண்ட மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரான மனோகணேசன், இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக ஜனாபதி உறுதியளித்த போதிலும் கடந்த கால நிகழ்வுகளைப் பார்க்கும்போது தங்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை எனவும் தெரிவித்தனர்.

ஜனாதிபதியுடனான இச் சந்திப்பில் இடது சாரித் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார ,விக்கிரமபாகு கருணாரட்ண ,சிறிதுங்க ஜெயசூர்ய , சமாதான ஆர்வலர் குமார் ரூபதுங்க , தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் ஆகியோர் பங்கேற்றனர். (ச-5)

# விடத்தல்தீவில் கிபீர் தாக்குதல்

(மன்னார்)

மன்னாரில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான விடத்தல் தீவில் கிபீர் விமானங்கள் நேற்று குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இத்தாக்குதலையடுத்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இத் தாக்குதலின் போதுஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து எவையும் தெரியவரவில்லை. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை ஒழித்ததன் பின்னரே ஒற்றையாட்சிக்குள் தீர்வுகாண வேண்டும்

## ஜே.வி.பி.அறிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தினை முதலில் அரசாங்கம் ஒழிக்க வேண்டும். அதன் பின்னர் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணப்படவேண்டும். அதிகார பகிர்வின் மூலம் தீர்வுகாணலாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளதன் மூலம் சுதந்திரக்கட்சியிடம் கொள்கை ஒன்று இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது என்று ஜே.வி.பியின் முக்கியஸ்தரும் எம்.பியுமான லால் காந்த தெரிவித்தார்.

எமது கட்சிக்கென்று ஒரு கொள்கை உள்ளது. அந்தக் கொள்கைகள் மீறப்படுவதினை நாங்கள் விரும்பமாட்டோம். எமது கொள்கையினை முழுநாட்டு மக்களும் விரைவில் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் சுதந்திரக்கட்சியின் கொள்கைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்தந்தக் காலப் பகுதிகளின் தலைவர்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்று அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஜனநாயகத்திற்கு தடையாக இருக்கின்ற பயங்கரவாதம் முதலில் ஒழிக்கப்படவேண்டம்.அதன்பின்னர் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையில் தீர்வுகாணப்படவேண்டும்.

அதிகார பகிர்வு குறித்து ஆராய தயார் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். சுதந்திரக்கட்சிக்கு எந்தவிதமான கொள்கைகளும் இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகார பகிர்வு குறித்து ஆராய வேண்டுமென்று சுதந்திரக்கட்சி பல தடவைகள் கூறிவந்துள்ளது. ஆனால் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஒற்றையாட்சி முறைமை முன்வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது அதிகார பகிர்வு முறைமை குறித்தான பேச்சு அடிபடுகின்றது. ஐக்கிய இலங்கைக்குள் மற்றும் பிரிபடாத நாட்டிற்குள் அதிகார பகிர்வு என்றும் கூறப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் சுதந்திரக்கட்சியிடம் உறுதியான கொள்கைகள் இருப்பதாக தெரியவில்லை. இதேவேளை அரசாங்கத்தின் அமைச்சர்களாலும் பரஸ்பரம் முரண்பாடான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

நீண்டகாலமாகவே சுதந்திரக்கட்சியிடம் உறுதியான கொள்கைகள் இருக்கவில்லை. அரசாங்கத்தினால் ஒற்றையாட்சி முறைமையை மீறி பிரச்சினைக்குத்தீர்வுகாண முடியாது. இருப்பினும் எந்தத்தீர்வு முறையையும் முன்வைப்பதற்கு முன்னர் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட வேண்டும்.

இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்த்தனா மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரின் காலத்திலும் புலிகளுக்கு எதிரான யுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எப்படி இருப்பினும் இனப்பிரச்சினைக்கான தீர்வு மக்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் சர்வஜன வாக்கெடுப்புக்கும் உட்படுத்தப்படவேண்டும் என்றார். (ச-5)

# உச்சக்கட்ட அதிகார பகிர்வின் மூலம் தீர்வொன்றினை அரசு காணவேண்டும்

## இந்தியா இலங்கையிடம் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் அதிக பட்ச அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காணவேண்டுமென கொழும்பு வந்துள்ள இந்திய உள்ளூராட்சி இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை மத்திய அமைச்சர் மணிசங்கர் ஐயர் பகிரங்கமாக வலியுறுத்தியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் பிரதமருமான எஸ்.டபிள்யு ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 47 ஆவது ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

எந்தவொரு தீர்வும் ஒரே இலங்கை என்ற கட்டமைப்புக்குள் அமையவேண்டும். எனக்கு இலங்கையை நன்றாகத் தெரியும். யுத்த நிறுத்த உடன்படிக்கையை இஸ்திரப்படுத்த முக்கிய அரசியல் கட்சிகளுடனான ஆதரவுடன் அனைத்து சமூகத்தினரது அபிலாசைகளை திருப்திப்படுத்தக்கூடிய ,இனங்களுக்கிடையே நிரந்தரமான சமாதான சகவாழ்வை உருவாக்கக்கூடிய அதிக பட்ச அதிகாரப் பரவலாக்கல் திட்டம் ஒன்றினை தீர்வாகக்கான விசேட முயற்சிகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தருணம் வந்திருக்கிறது என்றார் அவர்.

ஐக்கிய இலங்கைக்குள் உச்சக்கட்ட அதிகார பரவலாக்கல் மூலம் தீர்வொன்றினைக் காண அரசு முன்வரவேண்டுமென்று இந்தியா எதிர்பார்க்கிறது எனவும் கூறினார்.

இன்று இந்தியா புறப்படவுள்ள மணிசங்கர் நேற்றிரவு ஜனாதிபதியை சந்தித்துள்ளதாக தெரியவருகிறது.

(ச-5)

## உழவு இயந்திர விபத்தில் சிக்கி குடும்பஸ்தர் பரிதாப மரணம்

கொடிகாமம் தவசிக்குளத்தில் உழவு இயந்திரத்தின் பெட்டியின் துலாப்பகுதியில் நின்று சென்ற குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து சில்லேறி மரணமானார்.

நேற்று முன்தினம் விறகு வெட்டி ஏற்றிச் சென்ற போது உழவு இயந்திர பெட்டியின் துலாப் பகுதியிலிருந்து தவறி வீழ்ந்து தலையில் சில்லேறியமையால் பிரஸ்தாப குடும்பஸ்தர் மரணமானார்.

உயிரிழந்தவர் தவசிக்குளத்தைச் சேர்ந்த நாகராசா நவரத்தினம் (வயது 45) என்பவராவார்.

– சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணையை நடாத்திய சாவகச்சேரி நீதிவான் பிரேம்சங்கர் சடலத்தை பிரேதபரிசோதனைகளை மேற்கொண்ட பின் உற வினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## மன்னாரிலிருந்து வந்தவர்களை காணவில்லை என முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த 22 ஆம் திகதி மன்னாரிலிருந்து படகுகள் மூலம் அனலைதீவு நோக்கி வந்த பொதுமக்களை காணவில்லையென யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் தங்கியிருந்த பண்டத்தரிப்பைச்சேர்ந்த சிலர் மன்னாரூடாக அனலைதீவுக்கு வருவதாக அறிவித்திருந்தனர் எனவும் எனினும் இதுவரை அவர்களின் தகவல் எதுவும் கிடைக்கவில்லை எனவும் முறைப் பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5)

## பிரபாவிடமிருந்து உத்தரவாதம்...

பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவேண்டு மென்பதில் அரசாங்கம் உறு தியாக இருக்கிறது. ஆனால் அதற்கு புலிகள் தலைவரிடம் இருந்து எமக்கு நேரடியான உத்தரவாதம் தேவையாகும்.

மூதூர்ப் பகுதியில் பாதுகாப்பு படைகள் உயர் மட்டப்பாதுகாப்பை வழங்கிவருகின்றன. மக்கள் எக்காரணம் கொண்டும் இடம் பெயர வேண்டிய அவசியமில்லை.

துண்டுப்பிரசுரங்கள் குறித்து மக்கள் அலட்டிக்கொள்ளத்தேவையில்லை. மக்களுக்குத் தேவையான பாதுகாப்பை பாதுகாப்புப்படைகள் வழங்கும். இதுவரை 40 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக கூறப்படுகின்றது. இதனை நாங்கள் ஏற்கிறோம்.

ஆனால் ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்தாக கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என கெஹலிய மேலும் கூறினார். (எ-5)

## 10 ஆயிரம் மெ.தொன் உணவுப் பொருள்...

அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

யாழ்ப்பாணத்தில் மனித அவலம் எதுவும் இல்லை. யாழ்ப்பாணத்தின் நிலைவரங்கள் தொடர்பாக ஐ.நா.சபையின் அமைப்புக்கள் தவறான தகவல்களை வெளிவிடுகின்றன என்று அத்தியாவசிய சேவைகள் திணைக்கள ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

யாழில் பெரும் அவலம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது என்று ஐ.நா.நிறுவனங்கள் கூறுவதில் எதுவித உண்மையும் இல்லை என அவர் மறுப்புத் தெரிவித்திருக்கிறார். அத்தியாவசிய சேவைகள் ஆணையாள ரது கருத்தானது உண்மைக்குப் புறம்பானது.

யாழ்.குடாநாட்டிற்கு ஒரு மாதத்திற்கு ஆகக்குறைந்தது 10 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசிய பொருட்கள் தேவை. இதனையே யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனமும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால் கடந்த 45 நாட்களில் அரசின் புள்ளி விபரங்களின்படி 7 ஆயிரத்து 685 மெற்றிக்தொன் உணவுப் பொருட்கள் மட்டுமே குடாநாட்டிற்குச் சென்றடைந்துள்ளது.

ஆனால் இதுவரையும் 15 ஆயிரம் மெற்றிக் தொன் பொருட்கள் சென்றடைந்திருக்க வேண்டும்.

7 ஆயிரத்து 675 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் சென்றடைந்துள்ளது என அரசு கூறினாலும் அங்கு பொதுமக்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது.

குறிப்பாக குடாநாட்டில் இன்று ஒரு கிலோ அரிசி 135 ரூபா,ஒருகிலோ சீனி 250 ரூபா, ஒரு கிலோ மா [illegible] ஒரு பெட்டி 500 ரூபாவிற்கும் பெறமுடியாத அவலம்.

இந் நிலையில் குழந்தைகள், நோயாளர்களின் நிலை என்ன என கேள்வியை எழுப்பியுள்ளனர்.

வழங்கப்படும் உணவுப் பொருட்களில் மா, அரிசி என்பன புழுப்பிடித்தவையாகவும் பழுதடைந்து துர்நாற்றமுள்ளனவாகவும் மக்கள் எம்மிடம் முறையிடுகின்றனர். இதனை ஆணையாளர் அறிவாரா?

எனவே தொடர்ந்து சர்வதேச நிறுவனங்களை குற்றஞ்சாட்டுவதையும் பொய்யான தகவலைக்கூறி உலகை ஏமாற்றுவதையும் விடுத்து மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளின் உண்மை நிலை அறிந்து தீர்க்க நடவடிக்கை எடுப்பதே அவசியம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## யாழ்ப்பாண...

ணைகளில் முழு மனதுடன் செயற்படவில்லை. இது எமக்கு வருத்தமளிக் கிறது. இது புத்திசாலித்தனமானது அல்ல.

ஏனெனில் அரசாங்கம் தொடர்பில் சர்வதேச சமூகத்தினது நம்பிக்கையையும் பொறுமையையும் இழந்து வருகிறது. மூதூர் படுகொலைகள் போன்றவை தொடர்பில் அரசாங்கமானது சர்வதேச சமூகத்தின் கடும் அதிருப்திக்கு முகம்கொடுக்க நேரிடும்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டுகின்றனர். எந்தத்தரப்பும் வன்முறையை நிறுத்துவதாகத் தெரியவில்லை.யாழ்ப்பாணத்து நிலைமை மிகமோசமாகவுள்ளது என்றார் ஷொல்வ் பெர்க். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org